


**02. 03. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - கனடா இடையே பொருளாதார ஒத்துழைப்பு தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்தார்.

2. நம் நாட்டில் வெளிநாட்டு பல்கலைகழகங்களின் வளாகங்கள் விரைவில் அமைக்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. சென்னையில் வீட்டு வசதி நகர்புற வளர்ச்சித்துறை சார்பில், ஆயிரத்து 261 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஐந்தாயிரத்து 367 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழி தாளுடன் இன்று தொடங்கின.

5. மாசி மகத்தை ஒட்டி கும்பகோணம் மகாமக குளத்தில் தீர்த்தவாரி இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

## இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர் – கனடா

இந்தியாவும் – கனடாவும் ஜனநாயக மதிப்பீடுகளில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஹைதராபாத் இல்லத்தில் கனடா பிரதமர் மார்க் கார்னே-யுடன் இன்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அடுத்து 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்தியா கனடா இடையே பொருளாதார ஒத்துழைப்பு தொடங்கியிருப்பதற்கு பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இன்னும் நான்காண்டுகளில் இருநாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 50 பில்லியன் டாலரை எட்டும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விரிவான பொருளாதார பங்களிப்பு ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று கூறினார்.

கனடா நாட்டின் ஓய்வூதிய நிதியம் நம் நாட்டில் 100 பில்லியன் டாலரை முதலீடு செய்திருப்பதாகவும், இந்தியா மீது அந்நாடு கொண்டுள்ள வலுவான நம்பகதன்மையின் அடையாளம் இது என்றும் குறிப்பிட்டார்.

இருநாடுகளுக்கிடையே புதிய கண்டுபிடிப்புகளின் ஒத்துழைப்பால் உலகளாவிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

சர்வதேச சூரிய சக்தி மற்றும் உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டமைப்பில் கனடா இணைய முடிவு செய்துள்ளது குறித்து பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, புதுப்பிக்கசக்தி எரிசக்தி மற்றும் சேமிப்பு சார்ந்த உச்சிமாநாட்டை முன்னெடுத்து செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

சிவில் அணுசக்தி பிரிவில் நீண்டகால யுரேனிய விநியோகத்திற்கான வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் எட்டபட்டதாகவும், சிறிய ரக மற்றும் மேம்பட்ட அணுஉலைகளில் இருநாடுகளும் இணைந்து செயலாற்றும் என்றும் குறிப்பிட்டார்.

கனடா பிரதமர் மார்க் கார்னே பேசுகையில் இரு நாடுகளும் இணைந்து வர்த்தகம், பாதுகாப்பு, எரிக்தி பிரிவுகளில் வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தி புதிய நட்புறவிற்கு வழிகோலப்படும் என்றார்.

***********

தர்மேந்திரா

நடப்பு கல்வியாண்டில் 19 வெளிநாட்டு பல்கலைகழகங்களின் வளாகங்கள் இந்தியாவில் அமைய உள்ளன என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கல்விசார்ந்த மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், உலகளாவிய கல்வி நிறுவனங்களுடன் இந்திய பல்கலைகழகங்கள், செமிகண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, அரிய கனிம வளங்கள், வேளாண்மை,

நிலையான மேலாண்மை உள்ளிட்ட பிரிவுகளில் ஒருங்கிணைந்து செயலாற்றும் என்றார்.

இந்தியாவிற்கு கல்வி கற்பதற்காக வர உள்ள வெளிநாட்டு மாணாக்கரை வரவேற்ற அமைச்சர், தரமான கல்வியை நோக்கமாக கொண்டு இந்தியா செயல்படுவதாக குறிப்பிட்டார்.

நம் நாட்டின் கல்வி தரத்தின் நிலை மேம்பட்டு வருவதாகவும், இளையோருக்கு அதிக அளவில் பொருளாதார வாய்ப்புகள் வழங்கப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

நம் தேசத்தின் வலிமை இளையோரிடம் உள்ளதாகவும், 65 சதவிகிதத்திற்கு மேற்பட்டோர் இளைஞர்கள் என்றும், அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு நாடுகள் மற்றும் நாகரீகங்களுக்கு இடையே அறிவுசார் பாலத்தை உருவாக்க இந்தியா விரும்புவதாக கூறிய அமைச்சர், தென்னாடுகளின் வளர்ச்சி மாதிரியாக நம் நாட்டை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

***********

குடியரசு தலைவர்

சமூகத்தின் இன்றியமையா தூண்களாக பெண்கள் திகழ்கிறார்கள் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நான்கு மகளிர் மேம்பாடு திட்டங்களை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், நாகரீக வளர்ச்சியுடைய தேசத்தின் அடையாளமாக மகளிருக்கான மதிப்பும், ஆளுமையும் உள்ளது என்று கூறினார்.

மகளிர் ஆளுமை பெறும் வகையில் சமையல் எரிவாயு திட்டம், பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், கர்ப்பிணி பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு நிதி உதவி உள்ளிட்ட திட்டங்களை மத்திய அரசு செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

***********

தாக்குதல்

ஈரான் - இஸ்ரேல் மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையே ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுவதால் மேற்காசிய பகுதிகளில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளை இலக்காக கொண்டு ஈரான் ஏவுகணை தாக்குதலை தொடரும் நிலையில் இஸ்ரேலும் - அமெரிக்காவும் ஈரானை இலக்காக கொண்டு தாக்குதல்களை அதிகரித்துள்ளன,

பிரிட்டன் ஃபிரான்ஸ் ஜெர்மனி நாடுகளும் அமெரிக்காவுடன் இணைந்து ஈரானுக்கு எதிராக தாக்குதல்களை நடத்த தயாராக இருப்பதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில் அமெரிக்காவுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படாது என்று ஈரானிய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரான் மீதான் தாக்குதலுக்கு அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு.அப்பாஸ் அராஹ்ச்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் சட்ட விரோதமானது என்று கூறியுள்ள அவர், தற்காப்பு நடவடிக்கைகளை ஈரான் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதனிடையே குவைத்தில் ஈரான் தாக்குதலில் 3 அமெரிக்க துருப்புகள் உயிரிழந்ததற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேல் பெய்ரூட் மீது நடத்திய தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர்.

குவைத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

சைப்ரஸ் நாட்டில் உள்ள பிரிட்டன் ராணுவ தளத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

***********

மத்தியஅரசு கடிதம்

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் மீது தொடுத்த தாக்குதலை தொடர்ந்து நம் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை

மேற்கொள்ள மத்திய அரசு மாநிலங்களுக்கு கடிதம் எழுதியுள்ளது.

ஈரானுக்கு ஆதரவாக வன்முறையை தூண்டும் வகையிலான பேச்சுவார்த்தைகளை தடுத்து, சட்டம் ஒழுங்கை பேணிக்காக்கவும், இதுதொடர்பாக புலனாய்வு முகமைகளுக்கு தகவல் தெரிவிக்கவும் அந்த கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

***********

கிரண் ரிஜிஜூ

இஸ்ரேல் - ஈரான் இடையிலான பதற்ற நிலையை அடுத்து அப்பகுதிகளில் வசிக்கும் இந்திய குடிமக்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்ப பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

ஹிமாச்சல பிரதேச மாநிலம் கங்ராவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியர்களை மீட்பதற்கான விரிவான நடவடிக்கைகளை வெளியுறவுத்துறை அமைச்சகம் செயலாற்றி வருவதாக எடுத்துரைத்தார்.

***********

விமான ரத்து

ஈரானில் பதட்டம் நிலவுவதால் சென்னை விமான நிலையத்திலிருந்து மத்திய கிழக்கு பகுதிகளுக்கு

இயக்கப்படும் விமான சேவைகள் 3ஆவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டுள்ளன.

துபாய், அபுதாபி, சார்ஜா, குவைத் மஸ்கட் உள்ளிட்ட நாடுகளுக்கு செல்ல வேண்டிய 18 புறப்படு விமானங்கள் மற்றும் அங்கிருந்து வரும் 18 வருகை விமானங்கள் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து பயணிகள் கடும் அவதிக்குள்ளாயினர்.

விமான ரத்து எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உரிய விவரங்களை அறிந்துகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பகுதிகளில் உள்ள சில நாடுகளின் வான்வழி பகுதிகள் மூடப்பட்டதை அடுத்து இந்நடவடிக்கை.

அதேநேரத்தில் சென்னையிலிருந்து சிங்கப்பூர் மலேசியா இலங்கை லண்டன் தாய்லாந்து ஜெர்மனி ஹாங்காங் உள்ளிட்ட நாடுகளுக்கு விமானங்கள் வழக்கம் போல் இயக்கப்படுகின்றன.

***********

முதலமைச்சர்

தமிழ்நாடு வீட்டு வசதி நகர்புற வளர்ச்சித்துறை சார்பில், சென்னை தேனாம்பேட்டை, மயிலாப்பூர், கோட்டூர்புரம் பகுதிகளில் ஆயிரத்து 261 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாயிரத்து 367 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

தேனாம்பேட்டையில் ஆயிரத்து 984 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இன்று அடிக்கல் நாட்டிய முதலமைச்சர், பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகளையும் வழங்கினார்.

தொழில்துறை சார்பில் சென்னை நந்தம்பாக்கத்தில் 249 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதி நவீன வசதிகளுடன் கூடிய நிதிநுட்ப கோபுரத்தை முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

***********

பிளஸ் டூ பொதுத்தேர்வு

தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழி தாளுடன் இன்று தொடங்கின.

மாநிலம் முழுவதும் 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 மாணாக்கர் 3 ஆயிரத்து 412 மையங்களில், தேர்வு எழுதினர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தத்தம் பகுதிகளில் உள்ள தேர்வு மையங்களை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதனிடையே இன்று நடைபெற்ற மொழிதாள் தேர்வு குறித்து திருச்சியை சேர்ந்த பள்ளி மாணாக்கர் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

வாய்ஸ்

வரும் 26ஆம் தேதிவரை நடைபெறும் பிளஸ் 2 தேர்வில் முறைகேடுகளை தடுக்க மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்து

500க்கும் மேற்பட்ட பறக்கும் படைகள் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளன.

***********

மாசி மகம்

மாசி மக பெருவிழா இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி கும்பகோணம் மகாமக குளத்தில் தீர்த்தவாரி இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கடலூர் மாவட்டம் விருதாச்சலம் மணிமுத்தாறு, மயிலாடுதுறை காவிரி துலாகட்டம் உள்ளிட்ட பகுதிகளிலும், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வழிபாடு மேற்கொண்டனர்.

திருச்சி ஸ்ரீரங்கம் கொள்ளிடம் வடதிருகாவிரியில் அன்பில் சுந்தர்ராஜபெருமாள் மற்றும் உத்தமர்கோவில் புருஷோத்தம பெருமாள், எழுந்தருளி பக்தர்களுக்கு இன்று சேவை சாதித்து வருகின்றனர்.

***********

கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

கொல்கத்தாவில் நடைபெறும் முதல் அரையிறுதியில் தென்னாப்பிரிக்கா – நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

மும்பையில் வரும் வியாழக்கிழமை நடைபெறும் 2ஆவது அரையிறுதியில் இந்தியா இங்கிலாந்துடன் மோதுகிறது.

இறுதிபோட்டி வரும் 8 ஆம் தேதி அஹமதாபாத்தில் நடைபெறும்.

***********

தீ விபத்து

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே, பாண்டவர் மங்கலம் பகுதியில் செயல்படும், தீக்குச்சி கிடங்கில் இன்றுகாலை நேரிட்ட தீ விபத்தில் ஒரு தொழிலாளி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இரண்டு பேர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புத்துறையினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

வாகனத்திலிருந்து தீக்குச்சிகளை கிடங்கிற்குள் கொண்டு சென்றபோது தீப்பிடித்ததை அடுத்து வாகனமும் தீக்கிறையானது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********